**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, SATHYAMANGALAM**

STC .No:–112/2016 Date: 18.03.2026

சித்தமல்லப்பா–அ.சா.1

**குறுக்கு விசாரணை:–**

1. எதிரி எங்கு குடியிருந்து வருகிறார் என்றால் சத்தியமங்கலத்தில் குடியிருந்து வருகிறார் முகவரி தெரியாது. எதிரி என்னுடைய உறவினர் கிடையாது. என்னுடைய வீட்டிற்கும் எதிரி குடியிருக்கும் வீட்டிற்கும் 55 கி.மீ தொலைவு இருக்கும்.

2. எனக்கு ஆசனூர், அரேபாளையத்தில் சொத்துக்கள் கிடையாது. எதிரி எனக்கு எவ்வாறு பழக்கம் என்றால் 2010ம் வருடம் முதல் ஆசனூர், அரேபாளையத்தில் தொழில் விசயமாக செல்வேன் 2015ம் ஆண்டு எதிரி எனக்கு பழக்கமானார். எதிரி அரேபாளையம் சொசைட்டியில் வேலை பார்க்கிறார் என்ன வேலை பார்க்கிறார் என்று எனக்குத் தெரியாது.

3. அரேபாளையம் சொசைட்டியின் தலைவர் பெயர் சுப்பிரமணி என்றால் சரிதான். அவர் எனது நண்பர் கிடையாது தெரிந்த நபர் ஆவார். நான் மேற்படி சொசைட்டிக்கு செல்லும்போது எதிரி எனக்கு அறிமுகமானார். அந்த வகையில் பழக்கமானார். எனக்கு சொசைட்டியில் கணக்கு எதுவும் கிடையாது.

4. பணம் கேட்கும்போது எதிரி அரேபாளையம் சொசைட்டியில் வேலை பார்த்தார். எதிரி எங்கு வைத்து என்னிடம் பணம் கேட்டார் என்றால் என்னுடைய வீட்டிற்கு வந்து பணம் கேட்டார். எதிரிக்கு பணம் கொடுத்த பின்பு எத்தனை முறை சொசைட்டிக்கு சென்று எதிரியை சந்தித்துள்ளேன் என்றால் 4, 5 முறை சந்தித்துள்ளேன்.

5. எதிரி எந்த தேதியில் என்னிடம் பணம் கேட்டார் என்றால் தேதி நினைவில் இல்லை 8வது மாதம் 2015ம் வருடம் பணம் கேட்டார். பணம் கேட்ட அன்று கொடுக்கவில்லை 2 நாட்கள் கழித்துக் கொடுத்தேன். மேற்படி விபரத்தை என்னுடைய

அறிவிப்பு, புகார் மனு, முதல்நிலை சாட்சியம் ஆகியவற்றில் குறிப்பாக கூறியுள்ளேன் என்றால் இல்லை.

6. எதிரி ரூ.25,00,000/- எதற்காக கடன் கேட்டார் என்றால் வீட்டை இடித்துவிட்டு புதிதாக கட்டுவதற்காக பணம் தேவைப்படுவதாகக் கேட்டார். மேற்படி விபரத்தை என்னுடைய அறிவிப்பு, புகார் மனு, முதல்நிலை சாட்சியம் ஆகியவற்றில் குறிப்பாக கூறியுள்ளேன் என்றால் இல்லை.

7. எதிரி வீடு கட்டுவதற்காக பணம் கேட்டதால் அதுகுறித்து நான் சென்று பார்த்தேனா என்றால் இல்லை. நானாக உண்மைத்தன்மையைத் தெரிந்து கொள்ளவில்லை. எதிரி என்ன வேலை செய்கிறார், அவரது முகவரி தெரியாத நிலையில் எதிரிக்கு கடன் கொடுக்கும்போது என்ன ஆவணம் பெற்றுக்கொண்டு கடன் கொடுத்தேன் என்றால் காசோலையைப் பெற்றுக்கொண்டு கடன் கொடுத்தேன்.

8. எதிரிக்கு என்ன சொத்து உள்ளது என்று நான் தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. எதிரிக்கு என்ன வருமானம் வருகிறது என்பது குறித்து தெரிந்துகொண்டேனா என்றால் மாதம் ரூ.70,000/- வருமானம் வருவதாக எதிரி கூறினார். நான் எதிரியிடம் அதற்கான ஆவணங்களை வாங்கிப் பார்த்தேனா என்றால் பார்க்கவில்லை.

9. ரூ.25,00,000/- கடனை 38 நாளில் திருப்பித் தருவதாகக் கூறியுள்ள நிலையில் எவ்வாறு திருப்பிக் கொடுப்பார் என்று தெரிந்துகொண்டேனா என்றால் ரூ.40,00,000/- லோன் போட்டிருப்பதாகவும், வந்தவுடன் தருவதாகவும் கூறினார். நான் எதிரி லோன் போட்டதற்கான விபரங்களை சோதனை செய்யவில்லை.

10. எனக்கு 15 ஏக்கர் தோட்டம் உள்ளது. தாளவாடி கும்டாபுரத்தில் சர்வே எண்.681/1, 2, 3-ல் உள்ளது. மேற்படி தோட்டம் உள்ளதற்கான ஆவணங்களை இவ்வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை. நான் வருமான வரி செலுத்தி வருகிறேன். நான் கடன் கொடுத்த வருடத்திலோ அல்லது அதற்கு பிந்தைய வருடங்களிலோ எதிரிக்கு கடன் கொடுத்த விபரத்தை என்னுடைய வருமான வரிக்கணக்கில் காட்டியுள்ளேனா என்றால் இல்லை.

11. 2015–16–ம் ஆண்டு வருமான வரிக்கணக்கில் எனக்கு எவ்வளவு வருமானம் வந்துள்ளது என்ற விபரத்தை வருமான வரிக் கணக்கில் காட்டியுள்ளேனா என்றால் நினைவில் இல்லை. என்னுடைய வருமான வரி செலுத்தியதற்கான ஆவணங்களை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன்.

12. எனக்கு 4 வங்கிக் கணக்குகள் உள்ளன. நான் விவசாயக் கடன் மற்றும் அடமானக் கடன்கள் பெற்றுள்ளேன். 22 லட்சம், 15 லட்சம் லோன்கள் வாங்கியுள்ளேன். மேற்படி கடன் வாங்கவேண்டிய சூழ்நிலை இருந்ததால் நான் வாங்கினேன் என்றால் எனது வியாபரத்திற்காக கடன் வாங்கினேன். நான் வியாபரத்திற்காக விவசாயக் கடன் வாங்கினேன்.

13. நான் விவசாயத்திற்கு என்று பொய்யாகக் கூறி வியாபரக் கடன் பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. நான் கடன் கொடுத்ததாக கூறும் தேதியன்று எனது நான்கு வங்கிக் கணக்கிலும் ரூபாய் 25 லட்சம் பணம் இருந்ததா என்றால் இல்லை. 25 லட்சம் ரொக்கமாக என்னிடம் இருந்தது என்பதைக் காட்ட ஆவணங்கள் எதுவும் என்னிடம் இல்லை.

14. கடன் கொடுத்த தேதியன்று ரூபாய் 25 லட்சம் வருமானம் வந்தது என்பதை காட்டுவதற்கான ஆவணத்தை நான் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை. காசோலையை எனக்கு அளிக்கும்போது அதில் எழுதப்பட்ட விபரங்களை எதிரிதான் எழுதிக்கொடுத்தாரா என்றால் ஆமாம். என் முன்னிலையில்தான் எழுதிக்கொடுத்தார்.

15. மேற்படி காசோலையை வசூலுக்காக யார் வங்கியில் தாக்கல் செய்தார் என்றால் நானே நேரடியாகத் தாக்கல் செய்தேன். வசூலுக்கு தாக்கல் செய்யும்போது சலானை யார் நிரப்பினார்கள் என்றால் நான்தான் நிரப்பினேன். என்னிடம் காட்டப்படும் பு.சா.ஆ.2 வங்கி சலானிலும் காசோலையிலும் எழுதப்பட்ட விபரங்கள் ஒரே நபரால் எழுதப்பட்டதாக உள்ளது என்றால் சரிதான். (தற்சமயம் சாட்சி காசோலையை தான் எழுதவில்லை என்று கூறுகிறார்)

16. காசோலையையும் சலானையும் கையெழுத்து நிபுணருக்கு அனுப்ப சம்மதமா என்றால் சம்மதம். இவ்வழக்கின் எதிரிக்கு அறிவிப்பு அனுப்பியதற்கான ஆவணத்தைத் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். தபால் மூலமாக அறிவிப்பு அனுப்பினேன்.

17. நான் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் தபால் மூலம் அறிவிப்பு அனுப்பியதற்கான ஆவணங்கள் இல்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள கொரியர் ரசீதில் எதிரியின் முகவரி, அப்பா பெயர் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எனது அறிவிப்பிலும், முதல் நிலை சாட்சியத்திலும் எதிரிக்கு எப்போது அறிவிப்பு சார்பு செய்யப்பட்டதற்கான தேதி விபரத்தை நான் குறிப்பாக கூறவில்லை என்றால் சரிதான்.

18. எதிரிக்கு வழக்குரைஞர் அறிவிப்பு சார்வு செய்யப்பட்டதற்கான ஆவணங்கள் எதையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எதிரி அறிவிப்பைப் பெற்றுக்கொண்டு 15 நாட்களுக்குள் காசோலையைத் தொகையை திரும்ப செலுத்தவில்லை என்பதை நிருபிப்பதற்கு எதிரி அறிவிப்பை பெற்றுக்கொண்டதற்கான ஆவணத்தைத் தாக்கல் செய்யவில்லை என்றால் அதுகுறித்து எனக்குத் தெரியாது. பிரிவு 138ன் கீழான நிபந்தனைகளை நான் பூர்த்தி செய்யாததால் இவ்வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

19. வழக்குரைஞர் அறிவிப்பு அனுப்பியதற்கான கொரியர் ரசீதை இவ்வழக்கு தாக்கல் செய்யும் போது நான் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. என்னுடைய புகாரிலும், முதல்நிலை சாட்சியத்திலும் அறிவிப்பை எதிரிக்கு 20.10.2015—ம் தேதியன்று அனுப்பியதாக கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். நான் தாக்கல் செய்த கொரியர் ரசீதில் அது 22.10.2015—ம் தேதியன்று அனுப்பப்பட்டதாக விபரம் காணப்பட்டுள்ளது என்றால் சரிதான். 22.10.2015—ம் தேதியன்று அனுப்பிய ரசீது மற்றும் நகல் இரண்டையும் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

20. நான் இவ்வழக்கில் குறிப்பிட்டதுபோல் எவ்விதமான வழக்குரைஞர் அறிவிப்பும் எதிரிக்கு அனுப்பவில்லை என்றால் சரியல்ல. அவ்வாறு அனுப்பாத காரணத்தினால்தான் நான் வழக்கை முதலில் தாக்கல் செய்யும் மேற்படி ரசீதை தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

21. எதிரி அவர் வேலை பார்த்த சொசைட்டியில் முறைகேடு செய்ததாக 19.01.2015ம் தேதியன்றே பணிநீக்கம் செய்துவிட்டார்கள் என்றால் அதுகுறித்து எனக்குத் தெரியாது. மேற்படி அரேபாளையம் சொசைட்டியின் தலைவர் சுப்பிரமணியம் என்பவர் எதிரியிடமிருந்து கையெழுத்து மட்டும் பெற்று மற்றவை நிரப்பாமல் வைத்திருந்த காசோலையை வைத்து மோசடியாக என் மூலமாக இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

22. எதிரி 19.01.2015ம் தேதியன்று சொசைட்டியிலிருந்து பணி நீக்கம் செய்யப்பட்ட நிலையில் அதற்கு பின்பு நான் எதிரியை சொசைட்டியில் வைத்து சந்தித்ததாக கூறுவது உண்மையல்ல என்றால் சரியல்ல. இவ்வழக்கின் கால வரையறை முடிந்து பின்னிட்டு இவ்வழக்கை நான் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. 10.08.2015–ம் தேதியன்று எதிரி என்னிடம் 25 லட்சம் கடன் பெறவில்லை என்றும், அதற்காக இவ்வழக்கு காசோலை என்னிடம் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. 25 லட்சம் பணம் கடனாக கொடுப்பதற்கு எனக்கு வசதி வாய்ப்பில்லை என்றால் சரியல்ல. கடன் கொடுத்ததாக சொல்லப்படும் தேதிக்கு முன்போ 25 லட்சம் ரொக்கமாக என்னிடம் நான் வைத்தருந்ததில்லை என்றால் சரியல்ல.

23. மேற்படி காசோலையை என்னிடம் நேரடியாகக் எதிரி அளிக்காததால் நான் முறைப்படி காசோலையை வைத்திருக்கும் நபர் இல்லை என்றால் சரியல்ல. எதிரி என்னிடம் கடன் பெறாத நிலையில் அதனை திருப்பிச் செலுத்துவதற்கான கடமை இல்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கில் கூறியுள்ள கடனானது சட்டப்படியான கடன்

கிடையாது என்றால் சரியல்ல. இவ்வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டிய ஒன்று என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> –** இல்லை.